# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.141/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கார்முகி | க–பெ | பேபிநாதன் |
| ஊர்: | : | சோழணி | சமயம்: | |
| வயது: | : | 26/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் சோழணியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது அக்கா சுதர்சனாவிற்கு 15.12.2019 அன்று இரட்டை குழந்தைகள் பிறந்தன. சுதர்சனாவின் குழந்தைகளை பார்ப்பதற்காக நான் சென்னையில் இருந்து வந்திருந்தேன். இந்த நிலையில் 31.12.2019 அன்று காலை 10.40 மணிக்கு நான் சென்னைக்கு செல்வதற்காக காரைக்குடி புதிய பேருந்து நிலையத்திற்கு சென்று திருச்சி பேருந்தில் ஏறி உட்கார்ந்திருந்தேன். அப்போது எனது தாயார் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது பேருந்து நிலையத்தின் உள்ளே தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த TN 55 N 0940 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டிய நபர் அந்த பேருந்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து நடந்து சென்ற என் தாயார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது அதில் அவர் கீழே விழுந்து விட்டார். அவரது வலது முழங்கைக்கு கீழே மேற்படி பேருந்தின் இடது முன்பக்க சக்கரம் ஏறி இறங்கியதில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டது. இந்த விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். மேற்படி ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர். பின்னர் 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தேன். சம்பவத்தை நான் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸில் ஏற்றிசென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அசா1 வழக்கு சம்பந்தமாக புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் எனது அக்கா வீட்டுக்காரர் என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்ட அசா2 எனது தாயார் என்றால் சரிதான். சம்பவம் 10.30 மணியளவில் நடைபெற்றது. தாயாரை பழைய காரைக்குடி மருத்துவமனையில் 11.00 மணியளவில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் நானும் எனது அக்கா கணவர் எனது தாயார் மூவரும் சென்றோம். தேவதாஸ்

மருத்துவனையில் சுமார் 12-1 மணியளவில் சிகிச்சைக்காக சேர்த்தோம். சம்பவம் நடந்த இடம் பொதுமக்கள் அதிகமாகவும் பேருந்து வந்து போகும் இடம் என்றாலும் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் கடைகள் அதிகம் உள்ளது என்றால் சரிதான். நான் பேருந்தில் எந்த பக்கத்தில் அமர்ந்திருந்தேன் என்றால் பேருந்தின் முன்பக்கத்தில் அமர்ந்திருந்தேன். பஸ்நிலையத்தின் நுழைவு வாயில் இரண்டும் தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நுழையும் இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயர், ஊர் யார் சொன்னார்கள் என்றால் எனது மாமா ஒருவாரம் கழித்து தான் சொன்னார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது அம்மா என்னை கவனித்துக்கொண்டே பின்னாடி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.05 17:26:27 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.141/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிவநேஸ்வரி | க–பெ | கருணாநிதி |
| ஊர்: | : | இடையாத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025**

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் இடையாத்தூரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 2013 ம் வருடம் எனது கணவர் இறந்துவிட்டார். எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். மூத்தமகள் சுதர்சனாவை அசா1 க்கு திருமணம் செய்து கொடுத்தேன். இளைய மகள் கார்முகியை இடையாத்தூரில் திருமணம்செய்து கொடுத்தேன். எனது மகள் சுதர்சனாவிற்கு 15.12.2019 அன்று இரட்டை குழந்தைகள் பிறந்தன. அதனால் அவர்களுக்கு உதவியாக நான் இருந்தேன். சுதர்சனாவின் குழந்தைகளை பார்ப்பதற்காக கார்முகி சென்னையில் இருந்து வந்திருந்தார். இந்த நிலையில் 31.12.2019 அன்று காலை 10.40 மணிக்கு கார்முகியை வழி அனுப்புவதற்காக நான் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்திற்கு சென்று அவரை திருச்சி பேருந்தில் ஏற்றி உட்காரவைத்து விட்டு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது பேருந்து நிலையத்தின் உள்ளே தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த TN 55 N 0940 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டிய நபர் அந்த பேருந்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து நடந்து சென்ற என்மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது நான் கீழே விழுந்து விட்டேன். எனது வலது முழங்கைக்கு கீழே மேற்படி பேருந்தின் இடது முன்பக்க சக்கரம் ஏறி இறங்கியதில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் எனது மகள் கார்முகி என்னை அனுமதித்தார். சம்பவத்தை எனது மகள் கார்முகி அருகில் இருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸில் ஏற்றிசென்றார். மேலும் இந்த விபத்தை ஏற்படுத்தி ஓட்டுநரை என்னால் பார்த்தால் அடையாளம் காணமுடியும். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். மேலும் இந்த விபத்தில் வலது முழங்காலில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது. அசா1 வழக்கு சம்பந்தமாக புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எப்போது எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 31.12.2019 அன்று காலை 10.45 மணிக்கு நடந்தது. விபத்து நடந்த பிறகு என்னை எந்த மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்றால் காரைக்குடி பழைய அரசு மருத்துவமனைக்கு பிறகு மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு எப்போது அழைத்துச்சென்றார்கள் என்றால் 3 மணியா அல்லது 2..45 மணியா என்று தெரியவில்லை. என்னை போலீசார் எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவத்தன்றே போலீசார் என்னை காரைக்குடி பழைய அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். எனது மருமகன் எப்போது போலீசாரிடம் புகார் அளித்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனது மகள் பேருந்தில் எந்தப்பக்கம் உட்கார்ந்திருந்தார் என்றால் இரண்டு நபர்கள் உட்காரக்கூடிய சீட்டில் இருந்தார். வாகனத்தை ஓட்டி வந்த நபர் வேகம் குறைவாகவும் கவனமாகவும் வந்தார் நான் தான் அஜாக்கிரதையாக வண்டி வருவதை கவனிக்காமல் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.05 17:26:33 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.141/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | யுவக்கைலாஷ் | க–பெ | சிதம்பரம் |
| ஊர்: | : | இடையாத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 43/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் இடையாத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 2019 ம் வருடம் எனது மனைவி சுதர்சனா என்பவருக்கு காரைக்குடி கவிதா மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்திருந்தார். நான் அவருக்கு துணையாக இருந்தேன். அப்போது எனது மாமியார் சிவநேஸ்வரி எங்களுக்கு உதவியாக இருந்தார். 15.12.2019 அன்று எங்களுக்கு குழந்தைகள் பிறந்தனர். எனது மனைவியின் தங்கை கார்முகி என்பவர் எங்கள் குழந்தைகளை பார்ப்பதற்காக அப்போது வந்துவிட்டு 31.12.2019 அன்று காலை 10.40 மணிக்கு மேற்படி கார்முகியை திருச்சி அரசு பேருந்தில் உட்காரவைத்துவிட்டு எனது மாமியார் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சம்பவ சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது இடது புறமாக வந்த அரசு பேருந்து பதிவெண்TN 55 N 0940 என்ற பேருந்தை ஓட்டிவந்த நபர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து எனது மாமியார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அதில் அவருக்கு இடுப்பு வலதுபக்க வீக்க காயம், வலது முழங்கைக்கு கீழே மேற்படி பேருந்தில் இடது முன்பக்கச்சக்கரம் ஏறி நசுங்கியதில் ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருப்பதாக கார்முகி எனக்கு தகவல் சொன்னார். காயம் பட்ட எனது மாமியாரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்தார்கள். நான் மற்றும் எனது உறவினர்கள் மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். மேற்படி விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த குமார் என்று தெரியவந்தது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக எனக்கு தகவல் சொன்ன நேரம் 10.45. அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் காரைக்குடி சுப்ரமணியபுரத்தில் உள்ள வீட்டில்

இருந்தேன். சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ. எனது மாமியாரை நான் எங்கு சென்று பார்த்தேன் என்றால் பழைய அரசு மருத்துவமனைக்குசென்று பார்த்தேன். எனது மாமியாரை மதுரை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ப்பதற்காக நானும் கார்முகி என்பவரும் சென்றோம். அங்கு எனது மாமியாரை மாலை 4.00 மணியளவில் சிகிச்சைக்காக சேர்த்தோம். சம்பவம் நடந்த இடம் பொதுமக்கள் அதிகமாக இருக்கும் இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சற்று தள்ளி கடைகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. எனது மனைவியின் தங்கை பேருந்தில் எந்த சீட்டில் உட்கார்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் எப்போது புகார் அளித்தேன் என்றால் மறுநாள் காலையில் புகார் அளித்தேன். சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.05 17:26:38 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி